

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான **மு.க. ஸ்டாலின் அவர்கள்** நேற்று முன்தினம் (23.3.2024) திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், தஞ்சாவூர் தொகுதி வேட்பாளர் ச. முரசொலி அவர்களையும், நாகப்பட்டினம் தொகுதி வேட்பாளர் வை. செல்வராஜ் அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள் எஸ். இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், செல்வராஜ், பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், துரை சந்திரசேகரன், அண்ணா துரை, கௌதமன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.





கழக இளைஞர் அணிச் செயலாளர் **அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்**, இந்தியா கூட்டணியின் சார்பில் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் நவாஸ் கனியை ஆதரித்து திருச்சுழி, காரியாபட்டியில் பிரச்சாரம் மேற்கொண்டு, ஏணி சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்றத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக திருமங்கலம் நகரில் கை சின்னத்திற்கு வாக்கு கேட்டு பரப்புரை மேற்கொண்டார்.



கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், காங்கிரஸ் கட்சியின் 'கை' சின்னத்துக்கு ஆதரவாக, விருதுநகர் மக்களவைத் தொகுதி அருப்புக்கோட்டையில் நேற்று முன்தினம் பிரச்சாரம் செய்தார்.